**4.2. கல்வித் தகுதி:**

| **வ. எண்** | **பதவியின் பெயர்** | **கல்வித் தகுதி** |
|---|---|---|
| 1. | துணை ஆட்சியர் | தேர்வர்கள் இந்தியாவில் உள்ள மத்திய அல்லது மாநில சட்டமன்றத்தின் சட்டத்தால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் அல்லது நாடாளுமன்ற சட்டத்தால் நிறுவப்பட்ட பிற கல்வி நிறுவனங்கள் அல்லது பல்கலைக்கழக மானியக் குழு சட்டம்-1956, பிரிவு 3-இன் கீழ் பல்கலைக்கழகமாக அறிவிக்கப்பட்ட பிற கல்வி நிறுவனங்களில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். |
| 2. | துணைக் காவல் கண்காணிப்பாளர், (வகை-1) | 1. தேர்வர்கள் இந்தியாவில் உள்ள மத்திய அல்லது மாநில சட்டமன்றத்தின் சட்டத்தால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் அல்லது நாடாளுமன்ற சட்டத்தால் நிறுவப்பட்ட பிற கல்வி நிறுவனங்கள் அல்லது பல்கலைக்கழக மானியக் குழு சட்டம்-1956, பிரிவு 3- இன் கீழ் பல்கலைக்கழகமாக அறிவிக்கப்பட்ட பிற கல்வி நிறுவனங்களில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.<br>2. ஏனைய தகுதிகள் இணையாக இருப்பின் உடல்திறனுக்கான தேசிய விருது பெற்ற தேர்வருக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| 3. | உதவி ஆணையர் (வணிக வரிகள்) | 1. தேர்வர்கள் இந்தியாவில் உள்ள மத்திய அல்லது மாநில சட்டமன்றத்தின் சட்டத்தால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் அல்லது நாடாளுமன்ற சட்டத்தால் நிறுவப்பட்ட பிற கல்வி நிறுவனங்கள் அல்லது பல்கலைக்கழக மானியக் குழு சட்டம்-1956, பிரிவு 3- இன் கீழ் பல்கலைக்கழகமாக அறிவிக்கப்பட்ட பிற கல்வி நிறுவனங்களில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.<br>2. ஏனைய தகுதிகள் இணையாக இருப்பின், பின்வரும் வரிசைப்படி முன்னுரிமை வழங்கப்படும்<br>அ) முதலாவது: இளங்கலை வணிகவியல் பட்டம் (B.Com.,) மற்றும் இளங்கலை சட்டம் (B.L.,) ஆகிய படிப்புகளுடன் வரிவிதிப்புச் சட்டத்தில் பட்டயம் பெற்ற தேர்வர்கள்<br>ஆ) இரண்டாவது: இளங்கலை வணிகவியல் பட்டம் (B.Com.,) மற்றும் இளங்கலை சட்டம் (B.L.,) பெற்ற தேர்வர்கள்<br>இ) மூன்றாவது: இளங்கலை வணிகவியல் பட்டம் (B.Com.,) அல்லது இளங்கலை சட்டப் (B.L.,) படிப்பில் ஏதேனும் ஒன்றுடன் வரிவிதிப்புச் சட்டத்தில் பட்டயம் பெற்ற தேர்வர்கள்<br>ஈ) நான்காவது: இளங்கலை வணிகவியல் பட்டம் (B.Com.,) அல்லது இளங்கலை சட்டம் (B.L.,) பெற்ற தேர்வர்கள் |
| 4. | கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் | தேர்வர்கள் இந்தியாவில் உள்ள மத்திய அல்லது மாநில சட்டமன்றத்தின் சட்டத்தால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் அல்லது நாடாளுமன்ற சட்டத்தால் நிறுவப்பட்ட பிற கல்வி நிறுவனங்கள் அல்லது பல்கலைக்கழக மானியக் குழு சட்டம்-1956, பிரிவு 3- இன் கீழ் பல்கலைக்கழகமாக அறிவிக்கப்பட்ட பிற கல்வி நிறுவனங்களில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். |
| 5. | உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சி | 1. தேர்வர்கள் இந்தியாவில் உள்ள மத்திய அல்லது மாநில சட்டமன்றத்தின் சட்டத்தால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் அல்லது நாடாளுமன்ற சட்டத்தால் நிறுவப்பட்ட பிற கல்வி நிறுவனங்கள் அல்லது பல்கலைக்கழக மானியக் குழு சட்டம்-1956, பிரிவு 3- இன் கீழ் பல்கலைக்கழகமாக அறிவிக்கப்பட்ட பிற கல்வி நிறுவனங்களில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.<br>2. ஏனைய தகுதிகள் இணையாக இருப்பின், பின்வரும் கல்வித் தகுதிகளில் ஏதேனும் ஒரு கல்வித் தகுதியை பெற்ற தேர்வருக்கு முன்னுரிமை வழங்கப்படும் |

இணைக்கல்வித் தகுதி குறித்த அரசாணைகள் இவ்வறிவிக்கையின் தேதிக்கு பின்னர் வெளியிடப்பட்டிருந்தால் அவை இந்தத் தெரிவிற்கு கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

4.2.1.5. முதன்மைத் எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்படும் தேர்வர்கள், அவர்கள் விண்ணப்பத்தில், கோரும் முன்னுரிமைக் கல்வித்தகுதி உள்ளிட்ட அனைத்து உரிமை கோரல்களுக்கான உரிய சான்றுகளை தேர்வாணையத்தால் கோரப்படும் நேரத்தில் பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும்.

**4.3. மருத்துவ மற்றும் உடற்தகுதி:**

**4.3.1. துணைக் காவல் கண்காணிப்பாளர் (வகை-1) மற்றும் மாவட்ட அலுவலர் (தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்) தவிர ஏனைய பதவிகளுக்கு**

4.3.1.1. பணி நியமனத்திற்கு தெரிவு செய்யப்படும் தேர்வர்கள் உடல் தகுதிச் சான்றிதழை பணி நியமனத்தின் போது நியமன அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

4.3.1.2. தேர்வர்கள் உதவி ஆணையர் (வணிக வரிகள்) மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் பதவிகளுக்கு பார்வைத் திறனின் தரம் III பெற்றிருக்க வேண்டும். இதர பதவிகளுக்கு பார்வைத் திறன் தரம் III அல்லது அதற்கு மேம்பட்ட தரத்தை பெற்றிருக்க வேண்டும். கண்பார்வை குறைபாடுடைய தேர்வர்கள், அரசு மருத்துவமனையில் பணியாற்றும் தகுதி வாய்ந்த கண் மருத்துவ நிபுணரிடம் (Eye Specialist) பின்னிணைப்பு - V இல் உள்ளவாறு கண்பார்வை தகுதிச் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

4.3.1.3. துணை ஆட்சியர் பதவிக்கு நியமனம் செய்ய தேர்ந்தெடுக்கப்படும் தேர்வர் அவரது உடலமைப்பு, உடற் தகுதி மற்றும் வெளிப்புற வேலைக்கான திறன் ஆகியவற்றை தமிழ்நாட்டில் உள்ள ஏதேனும் ஒரு மருத்துவ குழுவின் முன் திருப்திபடுத்த வேண்டும்.

**4.3.2. துணைக் காவல் கண்காணிப்பாளர் (வகை-1) மற்றும் மாவட்ட அலுவலர் (தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்) பதவிகளுக்கு**

4.3.2.1. துணைக் காவல் கண்காணிப்பாளர் (வகை-1) மற்றும் மாவட்ட அலுவலர் (தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்) பதவிகளுக்கு தெரிவு செய்யப்படும் தேர்வர்கள் கீழ்க்கண்ட குறைந்தபட்ச உடற்தகுதியினை கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்.

<table>
<tr><th rowspan="2">பாலினம்</th><th rowspan="2">பதவியின் பெயர்</th><th rowspan="2">உயரம் (செ.மீ)</th><th colspan="2">மார்பு அளவீடுகள் (செ.மீ)</th><th rowspan="2">எடை (கி.கி)</th></tr>
<tr><th>இயல்பு நிலை</th><th>விரிவு</th></tr>
<tr><td rowspan="2">ஆண்</td><td>துணைக் காவல் கண்காணிப்பாளர் (வகை-1)</td><td>165</td><td>86<br>(மூச்சு வெளிவிட்ட நிலையில்)</td><td>05<br>(மூச்சு உள் வாங்கிய நிலையில்)</td><td>பொருந்தாது</td></tr>
<tr><td>மாவட்ட அலுவலர் (தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்)</td><td>165</td><td>89<br>(மூச்சு வெளிவிட்ட நிலையில்)</td><td>05<br>(மூச்சு உள் வாங்கிய நிலையில்)</td><td>50</td></tr>
<tr><td rowspan="2">பெண்</td><td>துணைக் காவல் கண்காணிப்பாளர் (வகை-1)</td><td rowspan="2">155</td><td rowspan="2" colspan="3">பொருந்தாது</td></tr>
<tr><td>மாவட்ட அலுவலர் (தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்)</td></tr>
</table>

**4.3.2.2. உடற்தகுதிச் சான்றிதழ்**

கீழே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அடங்கிய சான்றிதழை அரசு மருத்துவ நிறுவனங்களில் பணியாற்ற அரசால் நியமிக்கப்பட்ட உதவி மருத்துவர் நிலைக்கு மேல் உள்ள மருத்துவ அலுவலரிடம் தேர்வு அறிவிக்கை நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ கட்டாயம் பெற்றிருக்க வேண்டும். அந்த ஆவணங்களை தேர்வாணையம் கோரும்போது பதிவேற்றம் / சமர்ப்பிக்க வேண்டும். பெண் தேர்வர்களை பொருத்தவரை மார்பு அளவீடுகள் மற்றும் எடை ஆகிய விவரங்களை உடற்தகுதி சான்றிதழில் குறிப்பிடத் தேவையில்லை.

2.3 தேர்வர்களது அனுமதிச்சீட்டில் குறிப்பிட்டுள்ள பதிவு எண், பெயர், புகைப்படம், தேர்வின் பெயர், தேர்வு மையம், தேர்வு மற்றும் நேரம் போன்ற விவரங்களை உள்ளடக்கிய சுயவிவரங்கள் அச்சிடப்பட்ட OMR விடைத்தாள் தேர்வு அறையில் வழங்கப்படும். OMR விடைத்தாளினை பயன்படுத்துவதற்கு முன்பு, அதில் அச்சிடப்பட்டுள்ள புகைப்படம், மற்றும் பிற விவரங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு, அவைகள் அத்தேர்வர்களின் விவரங்கள்தான் என உறுதி செய்துகொள்ள வேண்டும். OMR விடைத்தாளில் உள்ள தகவல்கள் ஏதேனும் தவறாக இருந்தால் அல்லது எந்த வகையிலேனும் குறைபாடுடையதாக இருந்தால், தேர்வர்கள் விவரங்களை நிரப்புவதற்கு முன்னர், அதனை உடனடியாக மாற்றிக் கொடுக்கும்படி அறைக்கண்காணிப்பாளரிடம் கோரவேண்டும். OMR விடைத்தாளினை பயன்படுத்திய பின்னர் மாற்றித் தரப்படமாட்டாது.

2.4 OMR விடைத்தாளின் 2-ஆம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள சரியான முறைப்படி, விவரங்கள் மற்றும் விடைக்கான கட்டங்களை முழுவதுமாக நிரப்ப வேண்டும்.

2.5 தேர்வர்கள், விடைத்தாளில் அதற்கென உள்ள இரண்டு இடங்களில் தங்களது கையொப்பத்தினை இட வேண்டும். தேர்வு தொடங்குவதற்கு முன் விடைத்தாளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளைப் படித்தபின் ஒரு கையொப்பத்தினையும் தேர்வு முடிவடைந்தபின் மற்றொரு கையொப்பத்தினையும் இடவேண்டும்.

2.6 தேர்வு முடிவடைந்த பின், தேர்வர்கள், அவர்களது இடது கைப் பெருவிரல் ரேகைப் பதிவினை விடைத்தாளில் அதற்கென உரியகட்டத்தில் இடவேண்டும்.

2.7 தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வினாத்தொகுப்பு தேர்வர்களுக்கு வழங்கப்படும்.


2.8 தேர்வர்கள், வினாத்தொகுப்பின் எந்தவொரு பக்கத்திலும் எவ்வித குறியீடும் இடக்கூடாது. இவ்விதிமுறையை மீறும்பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

2.9 OMR விடைத்தாளில், வினாத் தொகுப்பு எண்ணை எழுதுவதற்கு மற்றும் அதற்கான வட்டங்களை நிரப்புவதற்கு முன், அனைத்து வினாக்களும் வினாத்தொகுப்பில் எவ்வித விடுதல்களுமின்றி அச்சிடப்பட்டுள்ளதா என்பதை தேர்வர்கள் முதலில் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். ஏதேனும் குறைபாடு கண்டறியும் பட்சத்தில், அது குறித்து உடனடியாக அறைக்கண்காணிப்பாளருக்கு தெரிவிக்க வேண்டும். அதற்கு மாற்றாக, குறைபாடு இல்லாத முழுமையான வினாத்தொகுப்பினைப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வினாத்தொகுப்பு எண்ணை OMR விடைத்தாளில் சரியாக எழுத வேண்டும். தேர்வு தொடங்கியபின்பு வினாத்தொகுப்பு / OMR விடைத்தாளில் ஏதேனும் குறைபாடு கண்டறியப்பட்டு முறையிட்டால், OMR விடைத்தாள் / வினாத்தொகுப்பு மாற்றித் தரப் படமாட்டாது.

2.10 OMR விடைத்தாள் மற்றும் வினாத்தொகுப்பு ஆகியவற்றில் குறைபாடு ஏதேனும் இருக்கிறதா என சரிபார்க்கப்பட்ட பின்னர், தேர்வர்கள் வருகைத்தாளில் தனது பெயர், பதிவெண் உள்ளதை உறுதி செய்து, அதில் தன்னுடைய வினாத்தொகுப்பின் எண்ணையும் குறிப்பிட்டு, கையொப்பத்தினை இடவேண்டும்.

2.11 தேர்வர்கள் வினாத்தொகுப்பு எண்ணை சரியாக எழுதுவதுடன், OMR விடைப்புத்தகத்தில் அதற்குரிய வட்டங்களில் சரியாகநிரப்ப வேண்டும். தேர்வர்களால் வட்டங்களில் நிரப்பப்பட்ட வினாத்தொகுப்பு எண்ணின்படியே அவர்களது OMR விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படும்.

2.12 வினாத்தொகுப்பு எண்ணை நிரப்பும் சரியானமுறை கீழே விளக்கப்பட்டுள்ளது. எ.கா.: வினாத்தொகுப்பு எண் 27430896 எனில்:





2.13 தேர்வர்களால் நிரப்பப்பட்ட வினாத்தொகுப்பு எண்ணை OMR Scanner–ஆல் கணிக்க இயலவில்லை எனில், அது தேர்வர்களால் வினாத்தொகுப்பு எண்ணை முறையற்று நிரப்புதல் அல்லது நிரப்பப்படாமல் விடுபட்டிருத்தல் போன்ற காரணங்களினால் ஏற்பட்டிருக்கலாம். அத்தகைய விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய இயலாது. எனவே, அவ்விடைத்தாள்கள் செல்லாததாக்கப்படும்.

2.14 தேர்வர்கள், ஒவ்வொரு வினாவிற்கும் விடைத்தாளில் ஒரு வட்டத்தை மட்டுமே கண்டிப்பாக நிரப்ப வேண்டும். ஒரு குறிப்பிட்ட வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்கள் நிரப்பப்பட்டிருந்தால், அவ்வினாவிற்கான விடை மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.

2.15 எந்த ஒரு வினாவிற்கும் விடைக்கான வட்டங்கள் நிரப்பப்படாமல் இருத்தல் கூடாது. ஏதேனும் கேள்விகளுக்கு வட்டங்கள் நிரப்பப்படாமல் இருப்பின், அவ்விடைத்தாள் செல்லாததாக்கப்படும். தேர்வர்களுக்கு ஏதாவது ஒரு வினாவிற்கு விடை தெரியவில்லை எனில், [E] என்ற வட்டத்தை நிரப்ப வேண்டும். மொத்தம் எத்தனை வினாக்களுக்கு முறையே [A], [B], [C], [D] மற்றும் [E] விடைகளை நிரப்பியுள்ளார் என்ற விவரங்களை OMR விடைத்தாளின் பகுதி 2-இன் பிரிவு III-இல் அதற்குரிய கட்டங்களில் எழுதுவதுடன் தொடர்புடைய வட்டங்களையும் தேர்வர்கள் நிரப்ப வேண்டும். தேர்வர்களால் OMR விடைத்தாளில் நிரப்பப்பட்ட [A], [B], [C], [D] மற்றும் [E] ஆகியவைகளின் மொத்த எண்ணிக்கையானது, வினாத் தொகுப்பில் அச்சிடப்பட்ட மொத்த கேள்விகளின் எண்ணிக்கைக்கு சமமாக இருக்க வேண்டும்.

2.16 OMR விடைத்தாளின் பகுதி–II இன் பிரிவு–III (a) மற்றும் பிரிவு-III (b) ஆகியவற்றை நிரப்புவதற்கான சரியான முறை கீழே விளக்கப்பட்டுள்ளது. எ.கா. OMR விடைத்தாளின் பகுதி–I இல் 36 $[A]_S$ விடைகளாக நிரப்பப்பட்டிருந்தால், பிரிவு–III (a) இல் வழங்கப்பட்ட கட்டங்களில் 036 என எழுத வேண்டும் மற்றும் பிரிவு – III (b) இல் அதற்குரிய வட்டங்களில் 0, 3 மற்றும் 6 என கீழே விளக்கப்பட்டுள்ளபடி நிரப்ப வேண்டும்.

A




2.17 தேர்வர்களால் OMR விடைத்தாளின் பிரிவு-III (b)-இல் நிரப்பப்பட்ட [A], [B], [C], [D] மற்றும் [E] ஆகியவைகளின் எண்ணிக்கையை தேர்வு அறையின் கண்காணிப்பாளர் OMR விடைத்தாளின் பகுதி-2-இன் பிரிவு IV-இல் நிரப்ப வேண்டும். தேர்வு முடிவடைந்த

# பிற்சேர்க்கை-V

## Eye Fitness Certificate

Distant vision without glasses (each eye separately)

Distant vision with glasses (each eye separately)

The amount of hyper metropia, myopia or astigmatic defect
and strength of correction glasses used

Near vision (each eye separately)

Whether suffering from squint or any morbid condition
of the eye lids (trachoma like of either eye)

Each eye, field of vision

Each eye colour vision

Each eye fungus appearance

Standard of vision

Having regard to the vision whether ______________________ (Name) is or is not fit for appointment as _______________ (Post)

**Note:**

- Squint will be a disqualification.
- Trachoma without complications is not a disqualification
- Colour vision should be tested with Ishibaras chart or Board of Trade Lamp and recorded
- Defective colour vision will be a disqualification